ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2058/34 - 2018 පෙබරවාරි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.02.15
*2058/34 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான்,*

*(அ) 2017.11.09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதன் மூலமும் மற்றும் அப்பிரிவின் கீழான கட்டளையின் II ஆம் அட்டவணையின் விடய இலக்கம் 1 (ஆ) மற்றும் 1 (இ) பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையினை, இதனகத்துப் பின்னர் உள்ளவாறான பின்னரும் அட்டவணை அ இனை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைப்பதற்கும், மற்றும்*

*(ஆ) 2017.11.28 ஆந் திகதிய 2047/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதன் மூலமும் மற்றும் அதே பிரிவின் கீழ் விடய இலக்கம் 02 மற்றும் விடய இலக்கம் 03 இன் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையினை, இதனகத்துக்குப் பின்னர் உள்ளவாறான பின்னரும் அட்டவணை ஆ இனை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைப்பதற்கும், மற்றும்*

*இக்கட்டளையானது 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும் எனவும் இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, பெப்புருவரி 15.*

***அட்டவணை அ***

| ***இல.*** | ***விவரம்*** | ***உற்பத்தித் தீர்வை*** |
|---|---|---|
| (ஆ) | *2018.02.15 ஆந் திகதிய, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2018 இன் கீழ் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி அரச உத்தியோகத்தர் ஒருவரினால்,* | *கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை* |

**அட்டவணை அ** *(தொடர்ச்சி)*

| இல. | விவரம் | உற்பத்தித் தீர்வை |
|---|---|---|
| (இ) | 2016.10.31 ஆந் திகதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை இல. 210 (III) மற்றும் அல்லது அதனோடு தொடர்புபற்ற ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூ தரகங்களுக்கும் தூ தரக அலுவலகங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களினால், | கொடுப்பனவு செய்யப் படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை |
| | **அட்டவணை ஆ** | |
| 02. | 2016.07.14 ஆந் திகதிய, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 இற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட சலுகை அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்டு, 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை அல்லது 2017.06.09 ஆந் திகதிய 2022/30 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புபற்ற திருத்தங்கள் என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தீர்வை அனுமதிப்பத்திரதாரரின் தெரிவுக்கேற்ப |
| 03. | 2016.10.31 ஆந் திகதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இல. 210 (iii) ஆம் இலக்க, சுற்றறிக்கை மற்றும் அவற்றுடன் தொடர்புபற்ற திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்டு, 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றி மீது | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை அல்லது 2017.07.11 ஆந் திகதிய 2027/7 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புபற்ற திருத்தங்கள் என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தீர்வை அனுமதிப்பத்திரதாரரின் தெரிவுக்கேற்ப |

03-219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.